பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 13 (26—6—68) புதன் ★ வெளியூர்: ஆனி 14 (27—6—68) வியாழன் [இதழ்: 10

மொரார்ஜியின் 'இராசபாளையப் பேச்சு'க்கு அமைச்சர் மு. கருணாநிதி சாட்டை

வீண் கனவுகள் காணாதீர்!

கழகம் காகிதக் கப்பல் அல்ல!

அமைச்சர் பதவியைவிட மக்கள் இதயத்தில் பெறும் இடமே எங்களுக்குச் சிறப்பு!

தென்காசி, சூன் 26—

"தமிழகத்தில் சட்டம் அமைதி இல்லை என்று கூறுவதன் மூலம் கழக அரசைக் கவிழ்க்க ஆரம்ப முகாந்தரமாக மொரார்ஜி தேசாய் கருதுவாரானால் அவருக்குச் சொல்லிக் கொள்வேன்—'தி.மு.க. அரசைக் கவிழ்த்துவிட்டு மீண்டும் ஒரு தேர்தல் நடத்தினால், இப்போது 138 பேர்களாக உள்ள நாங்கள் 148 பேர்களாக மாறுவோம்! நீங்கள் கவிழ்க்கக் கவிழ்க்கக் கவிழ்ந்து விடுவதற்குக் கழகம் காகிதக் கப்பல் அல்ல! நாங்கள் கட்டுமரம்! கடலில் கட்டுமரம் எப்படித்தான் கவிழ்த்தாலும் கவிழாது இருப்பதுபோல், நீங்கள் எவ்வளவுதான் கவிழ்த்தாலும் கவிழாமல் இருப்போம்!

"அப்படியே கவிழ்த்து விடுவதாக வாதத்திற்கு ஒத்துக்கொண்டாலும், நாங்கள் இந்த அமைச்சர் பதவியைவிட மக்களின் இதயத்தைப் பெரிதாக மதிப்பவர்கள்! மீண்டும் மக்கள் இதயத்தில் இதே புகழோடு பெருமையோடு— வாழ்வோம்! ஆகையால், வீண் கனவு காண வேண்டாம்' என்று அந்தப் பெரிய மனிதரைக் கேட்டுக் கொள்கிறேன்!"

—கழக அரசின் சாதனைகள் பற்றி!

அந்தச் சாதனைகளுக்குப் பரிசு கேட்க நாங்கள் வரவில்லை! நன்றியுள்ள மக்கள் நீங்கள்! மேலும் நாங்கள் பணியாற்ற—ஊக்கமூட்ட—உற்சாகப்படுத்த தி. மு. க. வேட்பாளர் சதிரவனை வெற்றி பெறச் செய்யுங்கள்!"

என்று, கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள். செங்கோட்டையில் நடைபெற்ற தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி எச்சரித்தார்.

தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம், செங்கோட்டை ஜனதா தியேட்டரில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, திரு. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., மதுரை கோவிந்தராசன் எம்.எல்.ஏ., பீர் முகம்மது எம்.எல்.ஏ., மன்னை நாராயணசாமி, ஏ. ஆர். சுப்பையா எம்.எல்.ஏ., சா. கணேசன் எம்.எல்.சி., வேட்பாளர் சதிரவன் ஆகியோர் பேசினர்.

இறுதியில் பொதுப்பணித்துறை அமைச்சர் கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மொரார்ஜி தேசாய், இராசபாளையத்தில், தி. மு. க. அரசுக்கு எச்சரிக்கை விடுத்து, 'சட்டம்—ஒழுங்கு கெட்டு விட்டது' என்று பேசியிருக்கிறார்.

மொரார்ஜி தேசாயை நான் மதிக்கிறேன். ஒரு மாநில அமைச்சர் ஒரு மத்திய அமைச்சருக்குத் தரும் மரியா[illegible]யை—மதிப்பைத் தருவதற்[illegible] தயாராக இருக்கிறேன்; [illegible]றல் அவர் பேசிய[illegible]த [illegible]திக்க நான் தயாராக இல்லை!

மொரார்ஜி தேசாய் இராசபாளையத்தில், 'தி. மு. க. ஆட்சியில் சட்டம்—ஒழுங்கு கெட்டு விட்டது' என்று பேசியதாக வெளிவந்த அதே பத்திரிகையில்தான், இவர்கள் இருந்து ஆட்சி நடத்தும் டெல்லியில், படுத்துறங்கும்போது 4 பேர்களை உயிருடன் கொளுத்தி விட்டதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. இந்த இலட்சணத்தில், இங்கு வந்து சட்டம்—அமைதி பற்றிப் பேசுகிறார் மொரார்ஜி!

சட்டம், ஒழுங்கு, அமைதியான ஆட்சி பற்றி பேசும் இந்த மொரார்ஜி யார்?—பம்பாய் மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று கோரிய நேரத்தில், மக்கள்மீது இரண்டாயிரம் ரவுண்டுகள் சுடச் சொன்ன அப்படிப்பட்டவரா இங்கு வந்து சட்டம் அமைதி பற்றிப் பேசுவது?

இவர் என்னதான் [illegible] நாட்டு மக்களுச் [illegible]

தேர்த[illegible] வரம்பு[illegible]

சட்டமன்ற தொ[illegible] ரூ. 12,000

புதுடில்லி, சூன் 26—

"தேர்தல் செலவுகளுக்கான உச்சவரம்பை அதிகரிக்கலாம்" எனத் தேர்தல் குழு கூறியிருக்கிறது.

இதனபடி, நான்கு தென் மாநிலங்களுக்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கு நிர்ணயித்துள்ள தொகை வருமாறு (தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள தொகை விவரம் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது):—

ஆந்திரம் ரூ 10,000 (ரூ 7,000).
கேரளம் ரூ. 10,000 (ரூ. 7,000)
தமிழகம் ரூ. 12,000 (ரூ. 9,000).
கருநாடகம் ரூ. 9,000 (ரூ. 6,000).

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

சட்டமன்றம் கலைக்கப்படும்

புதுடில்லி, சூன் 25—

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தி, இடைக்காலத் தேர்தல்களை நடத்துவது தவிர வேறு மாற்று வழியில்லை என்று கருதப்படுவதாக ஆதாரபூர்வமாகத் தெரிகிறது.

மாநிலத்தின் நிலைமையை மத்திய உள்துறையமைச்சர் சவாண், உன்னிப்பாகக் கவனித்துவருவதாகவும், மாநில ஆளுநர் நித்தியானந்த கனுங்கோவிடமிருந்து அவர் அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சரவை விலகல்

பீகார் முதலமைச்சர் திரு போலோ பாஸ்வான் சாஸ்திரி தமது அமைச்சரவையின் பதவி விலகல் மடலை இன்று ஆளுநர் நித்தியானந்த கனுங்கோவிடம் அளித்தார்.

சட்டமன்றத்தைக் கலைத்து[illegible]டு மறு தேர்தல் நடத்துமாறு[illegible] ஆளுநருக்கு யோசனை தெரி[illegible]

[illegible] தேர்தலுக்குப் [illegible]ண்டாவது கூட் [illegible]வையாகும் இது.

[illegible] திரு. மகாமாயா பிர[illegible] தலைமையில் [illegible] முதல் கூட்டணி அமைச் [illegible] தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து 1968 சனவரியில் பதவி விலகியது.

அதன்பிறகு, காங்கிரசு ஆதரவுடன் பதவியேற்ற சோஷித் தள அமைச்சரவையும் நீண்ட காலம் நீடிக்கவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அதுவும் பதவி விலகியது.

பின்னர் திரு. போலோ பாஸ்வான் சாஸ்திரி தலைமையில் இரண்டாவது கூட்டணி அமைச்சரவை பதவியேற்று 95-நாட்களே பதவியிலிருந்து இப்போது விலகியிருக்கிறது.

ஒரிசா அரசு மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

ஆளுங்கட்சி தயார்

புவனேசுவரம், சூன் 26—

ஒரிசா மாநிலத்தில் கடந்த 16 மாத காலமாக நடந்துவந்திருக்கும் சுதந்தரா—ஜனகாங்கிரசு ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை காங்கிரசுக் கட்சியும், பி. சோ. கட்சியும், சம்யூனிஸ்டு—ச சோ ஆகிய இரண்டும் சேர்ந்தும் தனித் தனியே கொண்டுவந்தன.

ஒரிசாவில் ஏதேனும் நெருக்கடி நிலை ஏற்பட்டு, இடைக்காலத் தேர்தல் நடத்தவேண்டிய கட்டம் வந்தால், அதற்கும் தாங்கள் ஆயத்தமாகவே இருப்பதாக ஆளுங்கட்சியான சுதந்தரா—ஜனகாங்கிரசு கூட்டணி தெரிவித்தது.

காங்கிரசு ஆதரவுள்ள கில் அமைச்சரவையும் கவிழும்

பஞ்சாபில் மீண்டும் கூட்டணி ஆட்சி?

லூதியானா, சூன் 25—

பஞ்சாபின் முன்னாள் (கூட்டணி) முதலமைச்சர் குருநாம் சிங், மீண்டும் தமது கூட்டணி அமைச்சரவைப் பொறுப்பேற்கும் நிலையைப் பெற்றிருப்பதாக அறிவித்தார்.

ஜனசங்கச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டமொன்றில் திரு. குருநாம் சிங் பேசினார்.

சண்டிகார் நகரப் பிரச்சினை குறித்து அவர் குறிப்பிடுகையில், தமது கூட்டணி, தலைமையமைச்சரின் தீர்ப்புக்குவிட ஒப்புக்கொண்டிருப்பதாகவும், கில் அமைச்சரவைதான் இப்பிரச்சினையில் சமூக ஒற்றுமையையே குலைத்துவருகிறது என்று அவர் குற்றஞ் சாட்டினார்.

காங்கிரசு கட்டளை

'எந்த ஒரு பிரச்சினையிலும் காங்கிரசுக் கட்சியைக் கலக்காமல் முடிவெடுக்க வேண்டாம்' என்று பஞ்சாப் மாநிலக் காங்கிரசுக் கட்சித் தலைவர் செயில் சிங் முதலமைச்சர் கில்லுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

குறிப்பாக நில உச்சவரம்பை 30-ஏக்கரிலிருந்து 40-ஏக்கராக உயர்த்தும் உத்தேசம் குறித்து அவர் இக்கடிதம் எழுதியுள்ளார்.

விழுப்புரத்தில் கலைக் கல்லூரி

முதலமைச்சர் அண்ணா திறந்துவைக்கிறார்

கடலூர், சூன் 26—

விழுப்புரத்தில், புதிய அரசினர் கலைக் கல்லூரியை சூலை 3-ம் நாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்.

சூப்பர் மார்க்கெட்டையும் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்.

தென்னாற்காடு விளையாட்டுகள் கவுன்சில் மைதானத்தில் ஒரு ஸ்டேடியத்துக்கு அன்று மாலையில் அவர் அடிக்கல் நாட்டுவார்.

78,282டன் அரிசிகொள்முதல்

தென்னாற்காடு மாநிலத்தில் இதுவரையில் 78,282 டன்கள் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கொள்முதல் இலக்கு 90,000 டன்களாகும்.

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசு உதவித் தொகை

66.6 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது

சென்னை, சூன் 26—

1967—67-ம் ஆண்டிலிருந்து நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளைப் பராமரிப்பதற்கு இதுவரையில் அரசு அளித்து வந்த மானியத் தொகையை மேலும் அதிகரித்து அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பித்திருக்கிறது.

பராமரிப்பு நிதியாக அரசாங்கம், நகராட்சிகளுக்கு இதுவரையில் 50 சதவிகிதம் (மொத்த பராமரிப்புச்செலவில் பாதி) மானியத் தொகை அளித்துவந்தது; இத்தொகை 66.6 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது, மொத்தச் செலவில் மூன்றில் 2-பங்கை அரசாங்கமே ஏற்கும்.

உயர்நிலைப் பள்ளிகளில் சட்டணம் வசூலிப்பதை நீக்கிவிட்ட பிறகு பள்ளியின் பராமரிப்புச் செலவை ஈடுகட்ட முடியாமல் சிரமப்பட வேண்டியிருக்கிறதென்றும், அரசாங்கமே உயர்நிலைப் பள்ளிகளை (நகராட்சியின்கீழ் உள்ளவை) ஏற்று நடத்தவேண்டும் அல்லது இதற்காகக் கொடுக்கப்படும் மானியத் தொகையையாவது அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், எல்லா நகராட்சிகளின் சார்பிலும் அரசாங்கத்திற்குக் கோரிக்கை கொடுக்கப்பட்டதையொட்டி அரசு மேற்கண்டவாறு மானியத்தொகையை அதிகரித்து உத்தரவு போட்டுள்ளது.

பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவது என்பது இப்போதுள்ள பண நெருக்கடியில் இயலாது என்றும், அரசு முன்வந்து அதிகரித்துக் கொடுத்துள்ள இந்த மானிய உதவியுடன் நகராட்சிகள், தங்கள் பள்ளிகளை நிதி நெருக்கடியினால் மூடிவிடாமல் தொடர்ந்து நடத்தும் என்று அரசு நம்புவதாகவும், உத்தரவு கூறுகிறது.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 13 (26—6—68) புதன்

தென்காசி இடைத் தேர்தல்

தமிழகச் சட்டப் பேரவைக்கான தென்காசித் தொகுதி இடைத் தேர்தல், அடுத்த திங்கள் மூன்றும் நாள் நடைபெறவிருக்கிறது.

முன்னேற்றக் கழகத்துக்கும்—காங்கிரசுக் கட்சிக்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டிருக்கிறது.

கழக வேட்பாளராக கா. மு. கதிரவன் போட்டியிடுகின்ருர்.

சென்ற பொதுத் தேர்தலிலும் கழக வேட்பாளராகக் கதிரவன் அவர்கள்தான் அத்தொகுதியில் போட்டியிட்டார்.

அத்தேர்தலில் கழக வேட்பாளர், வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார்.

'அவர் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டது, காங்கிரசு வேட்பாளரிடம்' எனக் கொள்ளுவதைவிட, 'காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்ட சிதம்பரம் (பிள்ளை) என்ற செல்வாக்குமிக்க ஒரு மூத்தவரிடம்' எனக் கொள்ளுவதுதான் பொருத்தமானதாகும்.

பொதுத் தேர்தலில் அத்தொகுதியில் கிடைத்த வெற்றி, காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த வெற்றியல்ல; அத்தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களின் நன்மதிப்புக்குரியவராக இருந்த சிதம்பரம் பிள்ளை அவர்களுக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான வாக்காளர்களின் மதிப்புக்கு உரியவராக சிதம்பரம் பிள்ளை அவர்கள் இருந்தும்கூட, கழக வேட்பாளரான கதிரவன் அவர்களைவிட, பிள்ளை அவர்கள், அறுநூற்றுக்குக் கொஞ்சம் கூடுதலான வாக்குகளை மட்டுமேதான் பெற்று வெற்றிபெற முடிந்திருக்கிறது.

பொதுத் தேர்தலில். கிடைத்திருக்கின்ற முடிவிலிருக்கின்ற படிப்பினையைக் கொண்டு, இந்த இடைத் தேர்தலின் முடிவு எப்படி இருந்திடக்கூடும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்களின் நன்மதிப்பைப் பெற்றிருப்பவரைப் பிடித்து -- கதர்ச் சட்டை போட்டு -- காங்கிரசு வேட்பாளராகத் தேர்தலில் நிற்கச் செய்து -- 'காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்றுவிட்டது' என விளம்பரப்படுத்திக்கொள்ளுவது, காங்கிரசுக் கட்சி வரலாற்றில் ஒரு கட்டம் !

பின்னர், இலட்சம் இலட்சமாகச் செலவு செய்து வெற்றியை விலை கொடுத்து வாங்கக்கூடிய செல்வச் சீமான்களை, காங்கிரசு வேட்பாளராக நிற்கவைத்து, 'காங்கிரசு வெற்றி பெற்றுவிட்டது' எனப் பறைசாற்றிக்கொள்ளுவது காங்கிரசு வரலாற்றில் மற்றெரு கட்டம் !

சொந்தச் செல்வாக்கு—பணம்—சாதி ஆகிய மூன்றையும் கணக்கிட்டு -- காங்கிரசு வேட்பாளராக ஒருவரை நிறுத்தி -- 'காங்கிரசுக் கட்சி வெற்றிபெற்றுவிட்டது' என, முழக்கமிட்டுக்கொள்ளுவது காங்கிரசு வரலாற்றில் இன்னெரு கட்டம் !

மேலே குறித்துள்ள மூன்றும்தான், காங்கிரசுக் கட்சியின் தேர்தல் திருப்பணி !

சனநாயகத் தேர்தல் முறைக்கு, காங்கிரசுக் கட்சி, அன்று முதல் இன்றுவரை செய்திருக்கின்ற சிறப்பு இம்மூன்றும் தான் !

'மாபெருந் தலைவர்' காமராசர் அவர்களின் கைப்பாவையாகத் தமிழகக் காங்கிரசுக் கட்சி இருந்துவந்த வரையில்தான், அதன் தேர்தல் பணி, மேலே குறித்திருப்பதுபோல் இருந்துவந்திருக்கிறது என்பதில்லை.

தமிழகக் காங்கிரசுக் கட்சியைத் தமது கைப்பிடிக்குள் பிடித்துக் கொண்டிருப்பதாகக் கொக்கரித்துக் கொண்டிருக்கின்ற கோவை சுப்பிரமணியம் ஆதிக்கத்திலாவது, காங்கிரசுத் தேர்தல் பணி அப்பழுக்கற்றதாக இருக்கிதா என்ருல், அதுவும் இல்லை !

'பெருமாள்' என்பது, 'பெத்த பெருமாள்' என மாற்றப் பெற்ற கதைதான் !

சில திங்களுக்கு முன்னர் நடைபெற்ற சங்ககிரி இடைத் தேர்தலில், வாக்காளர்களிடம் காதோடு காதாகப் பேசிய சாதிப் பேச்சே, சுப்பிரமணியம் அவர்களின் சனநாயக ஒழுக்கத்தைத் தமிழக மக்களுக்குப் புரிய வைத்துவிட்டிருக்கிறது !

தமிழகத்திலிருக்கின்ற காங்கிரசுத் தலைவர்கள் மட்டும்தான், தேர்தல் வெற்றிக்கு சாதீய அடிப்படையை அரங்கேற்றி வருகின்றனர் என்பதில்லை.

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலிருக்கின்ற காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் தேர்தல் வெற்றிக்காக, சாதீய அடிப்படையில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அந்த அடிப்படைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றனர். இந்த நோய், காங்கிரசுக் கட்சியைப் பற்றிக்கொண்டு ஆண்டுகள் பல வாகிவிட்டிருக்கின்றன.

சாதி அடிப்படையில் தங்களுக்குள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான், முக்குலத்தைச் சேர்ந்த ஓர் இளைஞரை, தென்காசி இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளராக சுப்பிரமணியம் குழுவினர் நிற்கவைத்திருக்கின்றனர். அத்தொகுதியில், முக்குலத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனர்.

அவர்களிடம், காங்கிரசு வேட்பாளரை ஆதரித்து வாக்களிக்கும்படி எப்படியெல்லாம்--எதை எதையெல்லாம் பேசுவார்கள் சுப்பிரமணியம் குழுவினரும்—காமராசர் குழுவினரும் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

சுப்பிரமணியம்—காமராசர் குழுவினரின்--உண்மையான சனநாயகத் தேர்தல் முறைக்கு அழிவு தேடக்கூடிய--நச்சுப் பிரச்சாரத்துக்கு, தென்காசித் தொகுதி வாக்காளர்கள் செவிசாய்க்கக் கூடாது—செவிசாய்க்கமாட்டார்கள்.

கழக வேட்பாளரான கதிரவன் அவர்களுக்கே அத்தொகுதி வாக்காளர்கள் வெற்றியைத் தேடித்தர வேண்டும்.

தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்காகத் தமிழக அரசியலில் திடீரெனத் தோன்றி, கழகத்தில் சேர்ந்தவர் அல்லா கதிரவன்.

பல்லாண்டுக்காலமாகக் கழக உறுப்பினராக இருந்து, பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர் அவர்.

கதிரவன் வெற்றி கழகத்தின் வெற்றி மட்டுமல்ல; அரசியல் அறநெறியின் வெற்றி--சிறந்த சனநாயக முறையின் வெற்றி.

—கா. க.

பத்து ஆண்டுகளாக திட்டம் தூங்கியது!

அன்றுகோட்டையிலே இருந்தவர்கள் ஆருடம் பார்த்துக் கொண்டிருந்தனர்

கழக ஆட்சி வந்ததும் காவிரி நீர்த் திட்டத்துக்கும் வழிபிறந்தது!

காவேரித்தாயின் சிலையைக் கிண்டல்செய்யும் பக்தவத்சலத்துக்கு அமைச்சர் மு. கருணாநிதி தரும் பதில்

தமது சொந்தத் தொகுதியில் உள்ள மேற்கு மாம்பலத்தில் 23 6–68 அன்று மண்கூடை சுமந்து சீரணியின் சாலை போடும் பணியைத் துவக்கிவைத்த பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 'தி. மு. க, ஆட்சி அதைச் செய்யவில்லை—இதைச் செய்யவில்லை' என்றெல்லாம் குற்றஞ்சாட்டிப் பேசிவரும் காங்கிரசுக் கட்சி எத்தர்களுக்குப் பதில் சொல்லும்வகையில் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—

தெளிந்த சிந்தனைக்கேற்ப சீரணி செயல்படுகிறது !

"அண்ணாவின் தெளிந்த சிந்தனைக்கேற்ப இச்சீரணி செயல்படுகிறது. அடையாற்றுக்குப் பக்கத்தில் பத்தே நாட்களில பள்ளி கட்டும் பணியை சீரணியினர் முடித்திருக்கின்றனர்.

அதேபோன்று, வியாசர்பாடியில் குறுகிய காலத்தில் கால்வாய் ஒன்றை வெட்டி முடித்தனர்.

தமிழகத்திற்கு வருகைதந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள், அண்ணாவைப் பாராட்டிவிட்டு, 'மகாத்மா காந்தி இன்று இருந்தால் சீரணியை ஆரம்பித்த அண்ணா அவர்களை மார்புறத் தழுவி மகிழ்ந்திருப்பார்?' என்று கூறினார்.

அதுபோல், அந்தந்தப் பகுதி மக்கள் சீரணியின் பணியைப் பாராட்டிப் புகழ்கின்றனர்.

சட்டத்தைத் திருத்தும் முறைகளைச் செய்து தந்தனரா?

'நகராட்சிச் சட்டத்தைத் திருத்தியாவது இந்தப் பகுதிக்குச் சீர்திருத்த வேலைகள் செய்ய வேண்டும்' என்று இங்கே கூறப்பட்டது. சட்டம் இருந்தாலும், அதை ஒருபுறத்தில் வைததுவிட்டுக் காரி[illegible] ஆற்ற வேண்டு[illegible]ன்பது [illegible] சரத்தால் கூ[illegible]

சட்டத்தைத் தி[illegible]புப் பெற்றவ[illegible] தார்கள் ; எ[illegible] சட்டத்தைத் திரு[illegible]கள் எதுவும் செ[illegible] 'சட்டத்தில் ஓட்டை[illegible]சலகளை அடைக்க வேண்டு[illegible] வளைவு நெளிவை நிமிர்த்த வேண்டும்' என்கிருர்கள் !

அது அன்று -- இது இன்று !

தமிழக அரசு பொறுப்பேற்றதும், மாநகராட்சி மேயரை நண்பர் முனுசாமி அவர்கள் அழைத்துவநது ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்திற்குக் கூவம் நதியைச் சீர்திருத்துவதற்கான அனுமதியைப் பெற்றுச் சென்ருர்.

கூவம் நதி சீர்திருத்தத்திற்காக 1959 முதல் அதற்கான முயற்சிகளை மாநகராட்சி சார்பில் எடுத்துக் கொண்டும் செயல்படவில்லை. ஆனுல் நாங்கள் பொறுப்பேற்றதும் அதற்கான துவக்க வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்துள்ளோம். இன்னும் இரண்டொரு திங்களில் அடிப்படை வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

அன்று ஆட்சியிலிருந்தோர் சோதிடம் பார்த்தனர் !

சென்னைக்குக் காவிரி நீர் கொண்டு வருவதைப் பற்றி முன்பிருந்தவர்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அதுவும் வீராணம் ஏரியிலிருந்து கொண்டுவருவதா—ஜேடர்பாளையத்திலிருந்து கொண்டுவருவதா — என்று ஜோதிடம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆலமரத்தடியில்தான்சோதிடம் பார்ப்பார்கள் என்ருல், இவர்கள் கோட்டையிலிருந்து கொண்டே பத்தாண்டுக் காலம் சோதிடம் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ! [illegible]யத்திலிருந்து [illegible]வதனல் அந்தத் [illegible] ரூ. 40-கோடி [illegible]துவும் நீண்ட [illegible]ம் திட்டம் [illegible]டைபெறும் ; [illegible]-கோடிதான் [illegible] அந்தத் திட் [illegible]இப்போது மேற் [illegible]ளோம்.

திட்டத்திற்கானதுவக்க வேலைக்கு அறிகுறி !

"காவேரி அம்மன் சிலை செய்து வைத்துவிட்டால் காவிரித் தண்ணீர் வந்துவிடுமா? பொம்மையைக் காட்டி மக்களை மோசடி செய்து ஏமாற்றி நடிக்கிருர்கள். இவர்கள்மீது மோசடி வழக்குத் தொடரலாம்" என்று பக்தவத்சலம் கூறுகிருர் !

சென்னை நகருக்குக் காவிரித் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்திற்கான துவக்க வேலையை மேற்கொண்டுவிட்டோம் என்பதைக் காட்டுவதற்கான அறிகுறிதான் காவேரி அம்மன் சிலை !

எந்தத் திட்டத்திற்கும் ரூ. 5 கோடிக்குமேல் செலவிட வேண்டுமென்ருல், மரபு முறைப்படி டில்லி அரசிடம்தான் அனுமதி கேட்கவேண்டும். அதற்குக்கூட அது, காலம்—நேரம் — இலக்கணம் பார்த்துக் கொண்டிருக்கிறது ! விரைவுபடுத்தவேண்டி, நாங்கள் கடிதம் வரைந்துகொண்டிருக்கிருேம் !

அதிகாரத்தையும் அதிகாரிகளையும் மட்டும் வைத்து எந்த அரசும் மக்களுக்கு நன்மை செய்துவிட முடியாது ! பக்கபலமாய் பொதுமக்களும் இருக்கவேண்டும்.

விளக்கம் கூறியும் உணர மறுத்தனர் !

சீரணிப் படையைச் 'செங்காவல் படை' என்று சிலர் கூறியபோது சட்டமன்றத்தில் அதைப் பற்றி அண்ணா விளக்கமாகக் கூறினார்.

நூற்றுக்கணக்கான குளங்களைத் தூர் வாரும் வேலைகள்—சாலைப் பணிகள்—மருத்துவமனை கட்டுதல்—கால்வாய் வெட்டுதல்—பள்ளிகள் கட்டுதல்—என்று ஆயிரக்கணக்கான வேலைகள் இன்று சீரணியினரால் நாட்டில் நடைபெறுகின்றன. சோவியத்–ஜப்பான் போன்ற நாட்டு மக்கள் வீணகப் பொழுதைப் போக்குவதில்லை.

பழகிய பழக்கம்தான் அதற்குக் காரணம்

அவர்கள் திரைப் படம் பார்ப்பதானுல்கூட தொடர்ந்து இரண்டு மணி நேரம் இருக்க மாட்டார்கள். காலை 10 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10-மணிவரை தொடர்ந்து அதே படம் ஓடிக்கொண்டிருக்கும் ; சிலர் முற்பகுதியை மட்டும் பார்த்துவிட்டு வேலை செய்ய வந்துவிடுவார்கள் ; வேலை செய்தபிறகு பிற்ப[illegible]யைச் சென்று பார்த்[illegible] [illegible]ர்கள்.

ஆனுல் இங்கே படம் பார்க[illegible] செல்பவர்கள், 'பதினேராயிரம் அடிதானு? இருபதாயிரமாவது இருநதால் கொஞ்ச நேரம்கூட இருந்துவிட்டுப் போகலாமே' என்று கூறுவதைக் கேட்டிருக்கிருேம்.

இங்கு வேலைகளை விட்டுவிட்டுப் பொழுதை எப்படிப் போக்குவது என்பதில் ஈடுபடுகிருர்கள் ! பொழுதை ஒரு பெரல்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசுக் கொள்கையின் விளைவு

மோசமான வாழ்க்கை நிலைமைக்கு வித்திட்டது !

பாட்டியாலா, சூன் 26—

"காங்கிரசுக் கட்சியின் கொள்கைகளால் நம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மிகவும் மோசமான வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

"காங்கிரசின் கொள்கைகள் கொள்ளை இலாபம் அடிப்பவர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்குமே இலாபமளிப்பதாக இருந்துவருகின்றன.

"காங்கிரசின் கொள்கைகள் இந்தியாவை ஒரு பிச்சைக்கார நாடாச்கிவிட்டன !

"நாட்டில் உருவாகியிருக்கும் ஒருவித சர்வாதிகார சூழ்நிலையே மாணவர்களின் அமைதியின்மைக்குக் காரணமாகும்.

"நாட்டின் உணவுப் பிரச்சினையைவிட இந்தச் சூழ்நிலை மிகவும் மோசமான பிரச்சினை ஆகும்."

— வி. கே. கிருஷ்ணமேனன்

நிஜலிங்கப்பாவின் குறிக்கோள் !

குடிசையில் தங்கி நிம்மதியாக ஓய்வெடுக்கப் போகிறாராம் !

பெங்களூர், சூன் 25—

"வெகு விரைவில் நான அரசியலுக்கு முழுக்குப் போடப் போகிறேன்.

"எனது சொந்த ஊரான சித்தலதுருகம் மலைகள் நிறைந்த ஊர்; அந்த இயற்கை அழகு என்னை மிகவும் கவர்ந்துவிட்டது.

"மலை உச்சியில் ஒரு சிறிய குடிசை கட்டப்போகிறேன்; அந்த குடிசையில் நிம்மதியாக வாழ்ந்து ஓய்வு எடுக்கப் போகிறேன்."

புதிய கல்விக் கட்டம்

தமிழக அரசின் ஏற்பாடு

சென்னை, சூன் 26—

நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து பள்ளிப் படிப்புக் கட்டங்களின் பெயர்களைத் தமிழக அரசு மாற்றியமைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 1-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை, 11 ஆண்டுப் பள்ளிப் படிப்பு இருந்துவருகிறது.

1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரையில் உள்ள படிப்பு 'பிரைமரி' என்றும், 6-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரையுள்ள படிப்பு 'மேல் பிரைமரி' என்றும், 9-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையுள்ள படிப்பு 'செகண்டரி' என்றும், இதுவரை அழைக்கப்பட்டு வந்தது.

இனி, 1-லிருந்து 5-வது வகுப்பு வரையுள்ள பள்ளிகள், 'பிரைமரி பள்ளிகள்' என்றும், 1-லிருந்து 8; அல்லது 6-லிருந்து 8-வது வகுப்புவரை உள்ளவை 'நடுத்தரப் பள்ளிகள்' என்றும், 1-லிருந்து 9; அல்லது 6-லிருந்து 9; அல்லது 9-லிருந்து 11-வது வகுப்பு வரையுள்ளவை 'உயர்நிலைப் பள்ளிகள்' என்றும் அழைக்கப்படும்.

...ம்மாற்றத்தைத் தொடர்ந்து, ...ளிகள் சம்பந்தமான விதி...தக்கவாறு திருத்தப்படு...

...பள்ளிகளின் பெயர்களை இவ்வாறுமாற்றியமைப்பதால் கிடைக்கும் பலன்களில் ஒன்று, 'மேல பிரைமரி ஆசிரியர்கள்' என இதுவரையில் அழைக்கப்பட்டுவந்த ஆசிரியர்கள், இனி, 'நடுத்தரப் பள்ளி ஆசிரியர்'களாகக் குறிப்பிடப்படுவர்.

தமிழக மேலவை ஆசிரியர் தொகுதியில் வாக்களிக்கும தகுதி இனி இவர்களுக்கு உண்டு; இதுவரை இந்த உரிமை இவர்களுக்கு இல்லை.

காங்கிரசார் ஆர்ப்பாட்டங்கள் கண்டு மக்கள் ஏமாறமாட்டார்கள் !

விலைவாசி குறைப்புக்குத் தமிழக அரசு செய்திடும் முயற்சியை அறிவர் !

செய்தியாளர்களிடம் அமைச்சர் மதியழகன் விளக்கம்

மதுரை, சூன் 26—

உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியதாவது :—

"சென்னை, கோயம்புத்தூர் நகரங்களிலும், அவற்றின் புறநகரப் பகுதிகளிலும், சுமார் 40 இலட்சம் பேர் இப்போது படி அரிசித் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

குடும்பக் கார்டு பகுதிகளில் ஒன்றேகால் கோடிப் பேருக்குத் தற்போது படி அரிசி ரூ. 1-25 என்ற விலையில் விற்கப்படுகிறது.

சில உபரி மாவட்டங்களில் பகிரங்க மார்க்கெட்டில் ஏற்கனவே ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு கிடைத்து வருகிறது.

வடாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களிலும், திருவாடானை, சிவகங்கை, முதலிய இடங்களிலும் ஒரு படி அரிசி ரூ. 1.20-க்குக் கிடைக்கிறது.

ஏழை மக்களுக்காக விலைவாசிகளை நிலைப்படுத்தும் நோக்கத்துடன்தான் படி அரிசித் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது; 'நிதி வசதியையும் அரிசி கிடைப்பதையும் அனுசரித்து, இத்திட்டம் விரிவு படுத்தப்படும்' என்று அரசு முன்பே கூறியுள்ளது.

விலைவாசிகளைக் குறைக்கத் தமிழக அரசு செய்துவரும் முயற்சிகளை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். காங்கிரசுக்காரர்களின் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அவர்கள் ஏமாந்துவிடப்போவதில்லை !

அரிசி மட்டுமின்றி, மற்ற உணவுப் பண்டங்களின் விலையும் தற்போது குறைந்திருக்கிறது.

படி அரிசித் திட்டத்திற்கு 1967—68-ம் ஆண்டில் இரண்டரைக் கோடி ரூபாய்தான் செலவாயிற்று : கொள்முதல் விலையை ஏற்றியதால் இரண்டரைக் கோடி ரூபாய் செலவாயிற்று.

நடப்பு ஆண்டில் படி அரிசித் திட்டத்திற்கு மூன்றரை முதல் நான்கு கோடி ரூபாய் வரை செலவாகும்."

பக்தவத்சலம் கூற்றுக்கு மறுப்பு

பஸ் பெர்மிட்டுகள், மற்... தொழில் லைசென்... பதில் அமைச்... பெற்றுப் பல... வதாக முன்... சர் பக்... சாட்டி இ... சர் மதிய... மாக மறுத்த...

பொறுப்புமிக்க திரு. பக்தவத்சலம், இதுபோன்ற பராபரியான புகார்களைச் செய்யக்கூடாதென்றும், தகுந்த சான்றுகளுடன் அவற்றை அவர் நிரூபிக்கட்டும் என்றும் அறைகூவல் விடுத்தார் அமைச்சர் !

ரூ 1·13 கோடி மதிப்புள்ள தங்கம் கடத்தல்

புதுடில்லி, சூன் 26—

இந்த ஆண்டு மே மாதத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் கிட்டத்தட்ட ஒரு கோடியே ரூ. 13 இலட்சம் மதிப்புக்குப் பொருள்களை கைப்பற்றினர்.

இதில், அன்னிய நாட்டு விலைப்படி ரூ. 12,54,000 மதிப்புக்கு தங்கமும் கைப்பற்றப்பட்டது.

சென்ற ஆண்டு மே மாதத்தில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பு சுமார் ரூ. 86 இலட்சமாக இருந்தது. இதில் சுமார் ரூ. 9-இலட்சம் மதிப்புக்கு தங்கம் கைப்பற்றப்பட்டிருந்தது.

தேர்தல் கணக்கு அனுப்பாதவர்கள்

மூன்றாண்டுகள் தேர்தலில் நிற்கத் தடை

சென்னை, சூலை 26—

தேர்தல் செலவுக் கணக்கு விவரங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கத் தவறியதற்காக 1968 சூன் 18-ஆம் நாள்முதல் மூன்றாண்டுக்காலத்துக்கு சட்டப் பேரவை—மேலவை, நாடாளுமன்றம் ஆகியவற்றிற்கான தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை தமிழ்நாட்டில் இருவர் இழந்துவிட்டதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவர்கள், சேலம் வட்டத்தைச் சேர்ந்த எஸ். எஸ் ஆறுமுகம், எஸ். வாலபாடி ஆகியோர் ஆவர்.

மாறனுடன் சேர்ந்து மண்கூடை சுமந்தார் அமைச்சர் கருணாநிதி

மேற்கு மாம்பலத்தில் சாலையமைப்பு— சீரணிப் பணி துவக்கம்

'செங்காவல் படை' எனக் கேலி செய்தோருக்கு முரசொலி மாறன் பதில்

23—6—68 மாலை 4-மணியளவில், சென்னை 96-வது வட்டம் (மேற்கு மாம்பலம்) மகாதேவ ஐயர் தெருவில், மேற்கு மாம்பலத்தையும்—புதூரையும் இணைக்கும் சாலை போடும் வேலை சீரணியினரால் தொடங்கப்பெற்றது.

இப்பணியைப் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும, முரசொலி மாறன் அவர்களும் கூடை மண் சுமந்து சாலையில் போட்டுத் துவக்கிவைத்தனர்.

சீரணியினர் போடப்போகும் இந்தச் சாலையின் நீளம் 900 அடியென்றும், அகலம் 30 அடியென்றும் சைதைப் பகுதி சீரணித் தலைவர் ஆர். டி. பாஸ்கரன் கூறினார்.

சாலைப் பணியைத் துவக்கிவைத்தபின், முரசொலி மாறன் தலைமையில் துவக்கவிழாக்கூட்டம நடைபெற்றது.

தோழர் மாறன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கியபோது மாற்றுக கட்சியைச் சார்ந்த சிலர், 'இது செங்காவல் படை போன்றது' என்று கூறினர். 'சமூக சேவைக்காகத்தான் சீரணி ஏற்பட்டதே தவிர, கட்சிக் கண்ணோட்டத்தில் அல்ல' என்று அண்ணா விளக்கினார்.

'காங்கிரசு' என்ற நோக்கமோ, 'சழகம்' என்ற நோககமோ இதில் இல்லை ! 'அனைவரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்' என்ற ஒரே நோக்கத்தில்தான் இது ஆரம்பமாயிற்று.

"வீட்டுக்காக இத்தனை மணி நேரம் வேலை செய்கிறோம் ; நாட்டுக்காக எத்தனை மணி நேரம் வேலை செய்கிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும் ; அப்படிச் சிநதித்ததில் நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டு...ன்ற அடிப்படையில் உரு...சீரணி" என்று ...துவக்கியபோது ...ள் கூறினார்கள.

...பான் நிபுணர் ...ணாவைச் சந்திக்க ...போது, அண்ணா ...ஒரு கேள்வி கேட... நான் சென்னையில் பல ...ங்...ப் பார்ததிருக்கிறேன்; திருச்சிக்குச் சென்றிருக்கிறேன் ; இதேபோல் தமிழ்நாட்டின் பல நகரங்களுக்கும சென்றிருக்கிறேன ; அங்கெல்லாம் இரவு 8-மணியானதும் தெரு முனையில்—வீட்டுத் திண்ணையில—முச்சந்திகள கூடும் இடத்தில் கூட்டம கூட்டமாக நின்றுகொண்டு ஏதேதோ பேசிக் கொள்கின்றனர் ; அது என்ன ?' என்று.

உடனடியாக எந்தக் கேள்விக்கும் சுடச்சுடப் பதில் சொல்லும் அண்ணா அவாகள, இதற்குப் பதில் சொலலக் கொஞ்சம் 'சங்கோஜப்'பட்டார்.

அப்படி என்ன நாம் பேசிக் கொளகிறோம் ? அடுத்த வீட்டுக்காரனைப் பற்றியோ, புதிதாக வந்த சினிமாவைப் பற்றியோ பேசிக்கொண்டிருப்போம் ; இது தான் நாம் ஓப்வு நேரங்களில் செய்யும் வேலை.

ஆனால் சோவியத் நாட்டிலோ, ஜப்பான் நாட்டிலோ இப்படி வீணாக ஓய்வு நேரத்தைக் கழிக்கமாட்டார்கள் !

ஆகவே, நாம் சீட்டு விளையாடும் நேரத்தில் சமுதாயம் மேம்பட—நாடு உயரத் தொண்டாற்றுவதற்காகச் சீரணியை அண்ணா ஆரம்பித்தார்.

அதற்குமுன்பு, 'சமூக சேவை' என்பது, பணக்காரர்களின் ஓப்வுநேரமாக இருந்தது. அந்த ஓப்வு நேர சமூக சேவையும், போட்டோவிற்குப் 'போஸ்' கொடுப்பதோடு நின்றுவிட்டதாக இருந்தது.

சீரணி அப்படிப்பட்டதல்ல ; இது ஆற்றிவரும் தொண்டுகளை நீங்கள் அறிவீர்கள்.

மராட்டியத்தில் சிவசேனை என்று ஒன்றிருக்கிறது ; 'வேட்டி கட்டுபவர்களெல்லாம் தமிழர்கள் ; ஆதலால், அவர்களை அடித்து விரட்டுங்கள்' என்று அது ஆர்ப்பாட்டம் செய்கிறது ! அராஜக வழியிலே நடை போடுகிறது !

அதைப்போல், அசாமிலே ஒரு படை இருக்கிறது ; அது, குண்டர் படையே தவிர தொண்டர் படை அல்ல !

இங்குதான், 'தொண்டர் படை' என்று கூறத்தக்கவிதத்தில் சீரணிப் படை செயல்படுகிறது !

இங்கு சீரணிப் படையினரால் போடப்படவிருக்கும சாலைக்கான பணி நிறைவுபெற்றால், மேற்கு மாம்பலமும்—புதூரும் இணைக்கப்படும. இத்தகைய நற்பணிகள் பலவற்றை ஆற்றுகின்ற இப்படை வாழ்க ! இவர்கள் தொண்டு வளர்க ! வெல்க !"

மற்றும் கோ. அய்யாவு, வழக்கறிஞர் மாத்ருபூதம் (சுதந்தரா), புதூர் செயராமன், அண்ணல், பகுதி சீரணித் தலைவர் ஆர் டி. பாஸ்கரன் எம்.சி., தென் சென்னை சீரணிச் செயலாளர் முத்துராமலிங்கம், சென்னை மாவட்ட சீரணித் தலைவர் நீல. நாராயணன், சீரணித் தனி அதிகாரி பரமசாமி, தேவநாதன், மாநகராட்சி மத்தியக் குழுத் தலைவர் வி. முனுசாமி ஆகியோர் பேசினர்.

கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு

மனுச் செய்வதற்கான காலவரை நீடிப்பு

சென்னை, சூன் 26—

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பிற்கு, நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசிநாள், சூன் 28-ம் நாள் வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

வங்கத் தமிழர் சங்கம்

முரசொலி மாறனுக்கு வாழ்த்து

சென்னை, சூன் 25—

அமெரிக்கா செல்லும் 'முரசொலி' மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களை வாழ்த்தி வழியனுப்பும் வகையில் வங்கத் தமிழர் சங்கச் சார்பிலும், அண்ணா மணி விழா மலர்க்குழு சார்பிலும் வங்கத் தமிழர் சங்கத் துணைச் செயலாளர் செ. வீரபத்திரன் அவர்களும், வங்கத் தமிழர் சங்க அண்ணா மணி விழா மலர்க்குழு அமைப்புச் செயலாளர் மா. செங்குட்டுவன், உறுப்பினர் ஓவியர் மா. முத்து, தோழர் பி. சந்தானம் ஆகியோரும் மாறன் அவர்களை இல்லத்தில் சந்தித்து மலர்மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டனர்.

மாறன் அவர்கள் அண்ணா மணிவிழா மலர்க் குழு உறுப்பினர் என்ற முறையில் மலருக்கான பணிகளையும் அமெரிக்காவில் கவனிப்பதாகத் தெரிவித்தார்கள்.

அமெரிக்க அறிஞர்கள் பலரிடமிருந்து, அண்ணா மணிவிழா மலர்க் கட்டுரை பெற்று வருவதாகவும் கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சமையலறையும் இயந்திரமயமாகிறது !

சமையல் அறைகளில் வேலைப்பளுவைக் குறைப்பதற்கான இயந்திரங்கள், ஜெர்மனியில் நடைபெற்ற ஓட்டல் தொழில் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

காப்பி தயாரித்துக் கொடுத்துவிட்டு, தானாகக் கழுவிக்கொள்ளும் இயந்திரம் — ரொட்டியைத் துண்டு போட்டவுடன் நின்றுவிடாமல் அவற்றின்மீது சீராக வெண்ணெய் தடவிக்கொடுக்கும் இயந்திரம் ஆகியவை அங்கு இடம் பெற்றிருந்தன.

விருந்துக்குப் போகும் விருந்தாளி, தனக்குப் பிடித்தமானதை சமைத்துச் சாப்பிடக்கூடிய புதுமையான தானியங்கி இயந்திரம்—ஆறு நிமிடங்களில் இறைச்சியை வேகவைக்கும் 'மைக்ரோ—வேன்' அடுப்பு—பொத்தானை அமுக்கினாலும் மறைவிடத்திலிருந்து கிளம்பும் குளியல் தொட்டி—ஆகியவை இக்காட்சியில் அனைவரது கவனத்தையும் கவர்ந்தன.

காங்கிரசு ஏட்டின் கயமைச் செயல்

"'நேர்மை' என்ற பத்திரிகையின் 15—6—68 இதழில், சென்னை 92-வது வட்டம் அண்ணா மன்றம், அழகிரி நினைவு மன்றம் ஆகியவற்றின்மீது அவதூறான செய்தி வெளிவந்துள்ளது. அது சம்பந்தமாக எங்கள் ... காங்கிரசுக்காரர்கள் ஆர். 2-போலீசு நிலையத்தில் எங்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டனர்.

"'அந்தப் பத்திரிகைபற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது ; இந்தச் செய்தி அநியாயமானது — தவறானது' என்று கூறி அவர்களே ஒத்துக்கொண்டனர்.

"ஆகவே மேற்படி பத்திரிகையின் பொய்ப் பித்தலாட்டச் செய்தி அபாண்டமானது. அந்தப் பத்திரிகைமீது தக்க நடவடிக்கை எடுப்பதாக உள்ளோம், அடுத்த இதழில், 'அந்தச் செய்தி தவறானது' என மறுப்பு வராவிட்டால் வழக்குமன்றம்மூலம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்" என்று, மேற்படி அழகிரி மன்ற அவைத் தலைவர் த. தாமோதரன் அறிவிக்கிறார்.

பண ஆசை காட்டிப் பார்க்கிறது மத்திய அரசு

இந்தி-பேசாத மாநிலங்களில் இந்தியில் படிக்க உதவியாம்

புதுடில்லி, ஜுன் 15—

இந்தி மொழியில் மெட்ரிக் ப்ரீட்சைக்கு மேற்பட்ட படிப்பை மேற்கொள்ளும் இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு மத்திய கல்வித் துறை 1968—69-ம் ஆண்டில் உதவிப் பணம் வழங்கவிருக்கிறதாம்.

இந்தி பேசாத மாநிலங்களில் பிரீ-யூனிவர்சிடி, இண்டர் மீடியட் பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 50 வீதம் உதவிச்சம்பளம் கிடைக்குமாம்.

இந்தி பேசப்படும் பகுதிகளில் இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 80 வீதம் தொகை அளிக்கப்படுமாம்.

பி. ஏ. இரண்டாவது, மூன்றுவது ஆண்டுகளில் படிக்கும் மாணவர்கள் மாதமொன்றுக்கு முறையே ரூ. 75—ரூ. 105 பெறுவார்கள்.

எம்.ஏ., எம்.லிட்., பி எச் டி. படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 100-ம், இந்தி ஆசிரியர் பயிற்சி மேற்கொள்கிறவர்களுக்கு ரூ 125-ம் கிடைக்கும்.

உதவிப் பணம் ஒதுக்கப்பட்டுள்ள மாநிலங்களின் கல்வித் துறைகளிடமிருந்து விண்ணப்ப நமுனுக்களையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

1967-ஆண்டுக்கு முன்னர் பல்கலைக் கழகப் பரீட்சையில் தேறியவர்களுக்கு இந்த உதவிப் பணம் வழங்கப்பட மாட்டாது.

கல்லூரிகளில் கூடுதல் இடம்

பல்கலைக் கழக அனுமதி

திருச்சி, ஜுன் 26—

அவசியமானல் சில கலைக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் ஹுமானிட்டிஸ் (வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்கள்) பிரிவுகளில் 100 மாணவர்கள் வரை சேர்த்துக்கொள்வதற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் அனுமதிக்கக் கூடும்.

தற்போது ஹுமானிட்டிஸ் பிரிவில் அதிகபட்சமாக 90 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கே பல்கலைக் கழகம் அனுமதித்திருக்கிறது

இராமேசுவரம்—தனுஷ்கோடி சாலை

சீரமைக்க டெல்லி ஒப்புதல்

புதுடில்லி, ஜுன் 26—

'இராமேசுவரம் தனுஷ்கோடி சாலையைச் சீரமைக்கவேண்டும்' என்ற தமிழக அமைச்சர் மாதவனின் கோரிக்கையை மத்திய அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

திரு. மாதவன், புதுடில்லியில், மத்திய அமைச்சர் ஜெயசுக்லால் ஹாத்தியைச் சந்தித்தபோது இந்தக் கோரிக்கையை வற்புறுத்தினர்.

இந்தச் சாலை 1963-ல் அடித்த புயலில் சீர்குலைந்து, போக்குவரத்துக்குப் பயன்படாமற் போனது நினைவிருக்கலாம்.

இந்தச் சாலையை இப்போது சீரமைக்க ரூ. 40 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27—6—68

ஆலக்கிராமம்

தி. மு. க. சார்பில் பாராட்டு விழா; மாலை 6-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: வே. துரைக்கண்ணு; பாராட்டுக் குரியவர்: இரா. சாம்பசிவம் எம்.எல்.சி.; பாராட்டுவோர்: புலவர் அறிவுடைநம்பி, ஆ. தங்கவேலு, வி. முனுசாமி எம்.எல்.ஏ. ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., வி. வேணுகோபால், எஸ். நடராசன், தி. க. கோட்டையன்.

சத்திரக்குடி

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு சேதுபதி விவேகானந்தபுரத்தில்; தலைவர்: சுப. வீரபத்திரன்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், தா. கிருட்டினன், டி. கே. சிறைமீட்டான், தென்னரசு, தமிழ்க் குடிமகன், சுப. தங்கவேலன், அ. வே. அரவரசன்.

மேற்கு ஜெர்மன் ஒத்துழைப்புடன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் இணைப்புக் குழுக் கூட்டம்

கால்நடை — வன வளர்ச்சித் துறைகட்கும் விரிவாக்க முடிவு

சென்னை, ஜுன் 26—

நீலகிரி வளர்ச்சிக்காக, மேற்கு ஜெர்மன் ஒத்துழைப்புடன் கடந்த ஓராண்டுக் காலமாக அமுல் நடத்தப்பட்டுவரும் திட்டம், விரைவில் கால்நடை வளர்ச்சித் துறைக்கும், வன வளர்ச்சித் துறைக்கும் விரிவுபடுத்தப்படும்.

உருளைக் கிழங்கு கோதுமை ஆகியவற்றின் ஏக்கர்வாரி விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்ட சோதனைகளுக்கு நல்ல வெற்றி கிடைத்திருப்பதால், இந்தச் சோதனைகளின் அடிப்படையில் விவசாயிகள் தாங்களாகவே, இத்தகைய சாகுபடியை மேற்கொள்வதற்கு உதவிபுரிவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் இயந்திரச் சாதனைகளையும், துணைச் சாதனங்களையும் கையாள விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு தொழில்கூடம் ஏற்படுத்தப்படும்.

நீலகிரி வளர்ச்சிக்கான இந்திய—ஜெர்மன் திட்டத்தின் மாநில இணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமியின் தலைமையில் நடைபெற்றபோது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தத் திட்டத்துக்கு மேற்கு ஜெர்மனி ரூ. 2 கோடி உதவுகிறது; முதல் மூன்ருண்டுக் காலத்தில் இது பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். இந்தத் திட்டத்துக்காக மாநில அரசு ஐந்தாண்டுக் காலத்தில் ரூ 2 கோடி செலவிடும்.

உருளைப் பயிரை பீடிக்கும் 'நெமடோட்' என்னும் பூச்சிவகையை ஒழிக்க நிலத்தில் புகையடிக்கும் சோதனை வெற்றி கண்டிருப்பதாக விவசாய அமைச்சர் கூறினர்.

இந்தத் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட சோதனையில், ஹெக்டேருக்கு கிட்டத்தட்ட 2½ ஏக்கர் 50 டன் உருளைக் கிழங்கு கிடைத்தது; சாதாரணமாக நீலகிரி பகுதியில் 20 டன்தான் கிடைக்கும்.

அதேபோல், கோதுமை சாகுபடி சோதனையிலும் ஹெக்டேருக்கு 5 டன் விளைச்சல் கண்டது; சாதாரணமாக அரை டன் கிடைப்பது வழக்கம்.

தற்போது நீலகிரியில் உருளைக் கிழங்கு மட்டுமே பயிரிடப்படும் நிலங்கள், கோதுமை—உருளைக் கிழங்கு—தீவனப் பயிர் ஆகியவற்றை மாற்றி மாற்றிப் பயிரிடுவது விவசாயிகளுக்கு இலாபகரமாக இருக்கும் என்பதும் இங்கு நடத்திய சோதனைகளிலிருந்து தெரிந்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் பழவகை சாகுபடி, காய்கறி சாகுபடி ஆகியவற்றையும் மேற்கொள்ள உத்தேசித்திருக்கிருர்கள்.

ஏழை ஆதித் திராவிடர்களுக்கு நிலப் பட்டா

பள்ளிக் குழந்தைகட்கு இலவசப் புத்தகங்கள்

காஞ்சி தலைநகராகும் விழாவில் வழங்கப்படும்

மதுரை, ஜுன் 26—

செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரைக் காஞ்சிக்கு மாற்றும் ஏற்பாடுகள் முடிவடைந்துவிட்டன.

இதற்கான விழா ஜூலை 6-ஆம் நாள், காஞ்சியில், முதலமைச்சர் அறிஞர் அண்ணு தலைமையில் நடைபெறும்.

இத்தகவலைத் தெரிவித்த அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் மேலும் கூறியதாவது:

"இவ்விழாவையொட்டி காஞ்சி நகராட்சித் துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவச சிலேட்டு, புத்தகங்கள் வழங்கப்படும்.

"காஞ்சியில் நிலமற்ற ஏழை ஆதித்திராவிட மக்களுக்கு நிலப் பட்டாக்கள் வழங்கப்படும்"

மருத்துவத் துறையில் கம்ப்யூட்டர்கள்

அறுவைச் சிகிச்சைக்குமுன், நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து உணர்விழக்கச்செய்து விடுகின்றனர் அல்லவா? இது போன்ற காரியங்களுக்கு கம்ப்யூட்டரைப் பயன்படுத்த முடியுமா?—அது எந்த அளவு தற்போதைய முறையைவிட பயனுள்ளதாக இருக்கும்?— என்பது குறித்து விவாதிக்க இலண்டனில் ஒரு மாநாடு நடைபெறும்.

வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் உலகெங்கிலுமுள்ள மருத்துவ நிபுணர்கள் கலந்துகொண்டு இம்முறையின் சாத்தியக்கூறு—அனுகூலம் பற்றி விவாதிக்க இருக்கிறர்கள்.

பத்து ஆண்டுகளாக...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லாத பகைவனைப் போலக் கருதுகிறோம்! நாம் பழகிய பழக்கமே அதற்குக் காரணம்.

பொறுமை அவசியம்!

சென்னையில் குறிப்பாக சைதைத் தொகுதியில் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய உண்டு. எந்த அமைப்பும் எதிலும் படிப்படியாகத்தான் செயல்பட முடியும். ஏழாவது சாலை போடும்போதே 'பத்தாவது சாலை ஏன் போடவில்லை' என்று கேட்கக் கூடாது. ஏழாவது சாலை போடுகிருர்கள் என்ருலே, எட்டாவது சாலை—ஒன்பதாவது சாலை போடப்போகிருர்கள் என்றுதான் அர்த்தம்! எதற்கும் பொறுமை இருக்கவேண்டும்!

ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கக் கூடாதா?

எத்தனையோ ஆண்டுக் காலம் பொறுத்திருந்தோம்; 20 ஆண்டுகளாகப் பொறுத்திருந்தோம்; காரியம் உருவாகி வரும் நேரத்தில் கொஞ்சம் பொறுக்கக் கூடாதா? ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கக் கூடாதா?

முன்னேடியாக நிற்போம்!

நான் மண் வெட்டி — மண்ணை அள்ளிச் சாலையில் போடுகிறேனென்ருல், மற்றவர்களுக்குத் தூண்டுதலாக இருக்க—உற்சாகமூட்ட—ஊக்[...] கொடுக்கத்தானே தவிர [...] ன்றில்லை, அதுவும் [...] னைப் பொறுத்தவரை[...] தொண்டர்கள் ஒரு காரியம் செய்ய வேண்டுமென்ருல் நாமே முன்னேடியாக நின்று செய்துகாட்ட வேண்டும் என்பதுதான்."

சென்னைச் சீரணித் தொண்டர்கட்கு:

மேற்கு மாம்பலம் சாலை அமைக்க அழைப்பு

சென்னை, ஜுன் 25—

சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் திரு. நீலநாராயணனும், சீரணித் தனி அதிகாரி திரு பரமசாமியும் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

"சென்னை மேற்கு மாம்பலம் மகாதேவ ஐயர் சாலையில் சீரணியினர் சாலை போடும் பணியைப் பொதுப் பணி அமைச்சர் திரு. கருணுநிதி அவர்கள் தொடங்கிவைத்தது தெரிந்ததே.

"இப்பணி விரைந்து தொடர்ந்து நடந்துவருகிறது. தென் சென்னைச் சீரணிச் செயலாளர் முத்துராமலிங்கமும், சைதைத் தொகுதிச் சீரணித் தலைவர் ஆர். டி. பாஸ்கரனும் முன்னின்று வேலைகளைக் கவனிக்கின்றனர். சீரணித் தொண்டர்கள் ஆர்வத்துடன் செயல்பட்டுவருகிருர்கள்.

"ஆயினும் பணியை விரைந்து முடிக்க சென்னையில் பல பகுதிகளிலும் உள்ள சீரணித் தொண்டர்களும் நாள்தோறும் தொடர்ந்து திரளாக வருகை தருமாறு வேண்டுகிறோம்."

கல்வி—தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜுன் 27 காலை 10-மணி: தஞ்சை—தமிழக சிறு தொழில் கார்ப்பொரேஷன் சைக்கிள் மற்றும் பல பகுதிகள் பார்வையிடல்; மாலை 4-மணி: கொடவாசல்—தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள். இரவு 8-மணி: எரவாஞ்சேரி—பொதுக்கூட்டம்.

திண்டிவனம், பண்ருட்டி நகர தி. மு. க. தேர்தல்

தலைமைக் கழக ஆணையாளர் கே. எம். கண்ணபிரான்

திண்டிவனம், பண்ருட்டி ஆகிய நகர தி. மு. க. கிளைகளின் தேர்தல்கள் முறையே 6—7—68, 7—7—68-ம் நாட்களில் காலை 9-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் (பொதுக் குழு உறுப்பினர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திண்டிவனம், பண்ருட்டி நகரக் கிளைகளின் நிர்வாகிகள், தேர்தல் நடைபெறும் இடம்—மற்ற விவரங்களை அந்தந்த நகரக் கிளையின் உறுப்பினர் அனைவருக்கும் முறைப்படி முன்கூட்டியே அறிவித்து, தேர்தல்கள் சிறப்புற நடைபெறும் வகையில் ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

பவானி தி. மு. [...] மறு[...]

தலைமைக் கழக[...] ஈ. ஆர். கிரு[...]

கோவை மாவட்டம் [...] தி. மு. க. கிளையில் ந[...] பெற்ற தேர்தல் குறித்து எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபனை—மற்றும் பிரச்சினைகளைத் தலைமைக் கழகம் பரிசீலனை செய்து, அங்கு மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பவானி தி. மு. க. கிளையின் தேர்தல்களை 6—7—68 சனிக்கிழமை காலை 9-மணிக்கு சேலம் மாவட்டச் செயலாளர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்கள், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராக இருந்து நடத்துவார்.

- தலைமைக் கழகம் (தி.மு.க.)

[...]லியில் [...]தவன்

[...]டன் சந்திப்பு

[...]லி, ஜுன், 26—[...]த்துள்ள தமிழ[...] [...]யமைச்சர் திரு. மாதவன், மத்திய உணவமைச்சர் திரு. ஜெகஜீவன்ராமைச் சந்தித்தார். கூட்டுறவுக் கடன்கள் பற்றி அவருடன் பேசினர்.

உள்துறை அமைச்சர் திரு சவானையும் அமைச்சர் மாதவன சந்தித்து, தமிழ்நாட்டுக்கு வரும்படி அழைத்தார்; அதற்கு அவரும் ஒப்புகொண்டார்.

டெல்லி அரசின் வணிகத்துறை அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர்—திரு. மாதவன்.

கோவையில் மூடப்பட்ட ஆலைகள் பற்றிப் பரிசீலிக்க இரண்டாவது குழு அமைப்பது பற்றி அவர்களுடன் விவாதித்தார்; 'இன்னும் சில நாட்களில் குழு அமைக்கப்படும்' என்று அதிகாரிகள் கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு [...]